மொழிப்போர்த் தியாகிகளான தாளமுத்து, நடராசன், தருமாம்பாள் நினைவிடத்தில் -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்துகிறார்!

கழகத் தோழர்களுக்கு - சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு மர தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ் கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபங்கள் தாளமுத்து, நடராசன் மற்றும் டாக்டர் தருமாம்பாள் ஆகியோருக்கு வருகிற 25.1.2025 சனிக்கிழமை அன்று காலை 8.30 மணி அளவில் சென்னை மூலக்கொத்தளம் மயானத்தில் உள்ள நினைவிடத்தில், தமிழ்நாடு முத லமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக முன்னணியினர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

அதுபோது கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட் டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநக ராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவி டர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறு பான்மையினர் நலஉரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற் றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர்த் தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ.
பொறுப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

நாள்: 21.1.2025

கந்திலியில் குப்பை அள்ளும் பேட்டரி வாகனம் - க.தேவராஜ் எம்.எல்.ஏ. இயக்கி வைத்தார்

திருப்பத்தூர், ஜன. 21 - திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி வட்டார வளர்ச்சி அலு வலகத்தில் நடைபெற்ற கிராம ஊராட்சிகளுக்கான குப்பை சேகரிக்கும் பேட்டரி வாக னத்தை மாவட்டச் செயலாள ரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க. தேவராஜி சிறப்பு அழைப்பாள ராக கலந்து கொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்து சிறப் பித்தார். இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் அ.நல்ல தம்பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கு.ராஜமாணிக்கம், கந்திலி ஒன்றியக்குழு தலைவர் திருமதி. திருமுருகன், கந்திலி தெற்கு ஒன்றியச் செயலாளர் டி.அசோக்குமார், கந்திலி மத் திய ஒன்றியச் செயலாளர் கே.ஏ.குணசேகரன், கந்திலி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் அ.மோகன்ராஜ், மாவட்ட கவுன்சிலர் சுப்பிரமணி, ஒன்றி யக் குழுத் துணைத் தலைவர் மோகன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசர தன், எம்.சிங்காரவேலன் மற் றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், தூய்மை பணி யாளர்கள் கலந்துகொண்டனர்.

ஜன. 29 அன்று நடைபெறுகிறது!

நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 29.1.2025 - புதன்கிழமை காலை 10.00 மணியளவில், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் - 'மாதா மாளிகை'யில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் - நெல்லை மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் மற்றும் பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : பிப். 6, 7 ஆகிய நாட்களில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்துக்கு வருகை!

மற்றும் - கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் **கே.என்.நேரு**
தலைமைக் கழக முதன்மைச் செயலாளர்
தி.மு.க.

அமைச்சர் ஆர்.காந்தி - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

ஆற்காடு ஒன்றிய மாணவரணி டி.மோகன்ராஜ் - பி.கீர்த்தனா மணவிழா!

ஜெ.எல்.ஈஸ்வரப்பன் - ஆர்.ஜி.வினோத் காந்தி - ஏ.கே.சுந்தரமூர்த்தி - எம்.வி.பாண்டுரங்கன் முன்னிலை!

ஆற்காடு, ஜன. 21- ராணிப்பேட்டை மாவட் டம், ஆற்காடு வட்டம் - முப் பதுரெட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆர்.தனுஷ்கோடி - சூரியகலா ஆகியோரின் புதல் வரும் - ஆற்காடு ஒன்றியக் கழக மாணவரணி துணை அ மை ப் பா ள ரு மா ன டி.மோகன் ராஜிக்கும், சென்னை, மேற்கு சைதாப் பேட்டையைச் சேர்ந்த தி.சி. பூங்காவனம் - சங்கரி ஆகியோ ரின் புதல்வி பி.கீர்த்தனாவுக்கும் மணவிழா 27.1.2025 - திங்கட் கிழமை காலை 6 மணியளவில் இராணிப்பேட்டை மாவட் டம், ஆற்காடு, இளங்குப்பன் தெருவில் அமைந்துள்ள இந்தி ராணி ஜானகிராம முதலியார் திருமண மண்டபத்தில் நடை பெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு 26.1.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை மாவட் டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, ஒன்றிய முன்னாள் இணையமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஆர். ஜி.வினோத் காந்தி, ஏ.கே.சுந்த ரமூர்த்தி, எம்.வி.பாண்டுரங் கன், வீ.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் ஏ.வி. சாரதி, ஏ.வி.சரவணன், புவ னேஷ்வரி சத்தியநாதன், காந்தி மதி பாண்டுரங்கன், தேவி பென்ஸ்பாண்டியன், ஜெ.சண் முகம், டாக்டர் பி.என்.எஸ். சரவணன், எஸ்.அசோக், ஸ்ரீமதி நந்தகுமார், டாக்டர் பவளக் கொடி சரவணன், ஜெ.ரமேஷ், பி.பிச்சாண்டி, எல்.தட்சணாமூர்த்தி, ஜெ.சரவ ணன், பி.தணிகைவேல், பி.ஜி. பத்மநாபன், ஆ.ப.கணேசன், எஸ்.வினோத், பி.ஆனந்தன், வேதா சீனிவாசன், சிவசங்கர், ஜெ.தொன்போஸ்கோ

எம்.பி.சேகர், ஜி.பண்டரிநா தன், வி.மணி, எம்.உமாமகேஷ் வரன், ரோஜா மனோகரன், பி.அன்பு, வி.கோபு, வி.தாமோ தரன், பி.என்.எஸ்.ராஜசேக ரன், பொன்ராஜசேகர், கே. சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவிக்கு மார், எஸ்.ருக்மணி, ஏ.ஏ.கே. கஜேந்திரன், ஏ.ஜி.லிங்கவேஷ், ஆ ர் . கே ா பு , ஏ.சிவா, வி.விஜயகுமார், மி. கஜபதி, கே.தனிகேசன், எம். சிவாஜி, சபியுல்லா, ஏ.ஜெ. ரமேஷ், கே.பிரபா கரன், வி. சீனிவாசன், ஜி.சாரதி, ஏ. ஜெ.குருமூர்த்தி, பி.யுவராஜ், பி.ராம்கி, எஸ்.பிரகாஷ், ஜி.பாலாஜி, சல்மா, என். கார்த்தி உள்ளிட்ட கழக நிர் வாகிகள் பங்கேற்று வாழ்த்து கின்ற னர்.

இரா.சரண்ராஜ் நன்றி கூறு கிறார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு புழல் 24 வது வட்டத்தில் கழக முன்னோடிகளுக்கு புத்தாடைகள் மற்றும் பொங்கல் பரிசினை 24வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், வட்ட நிர்வாகிகள் சி.ஜே.ரவி, பி.கென்னடி, என்.எழில்ராவணன், எம்.அந்தோணி, மலர்கொடி செல்வராஜ், ஏ.ஜெயகர், பிஎஸ்என்எல் நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கௌதமன், எம்.உதயப்பாரி மற்றும் வழக்கறிஞர் கே.பி.எஸ்.அன்பரசு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். நிகழ்வில் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தலைமை : நா.ராதாகிருஷ்ணன் - முன்னிலை : இரா.துரைராஜ் எம்.சி

சைதை கிழக்கு 168 வது வட்டத்தில் பொங்கல் விழா கோலப்போட்டி!

3000 மகளிர்க்கு பரிசுகள் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்

சென்னை, ஜன. 21 - அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் , மா.சுப்பி ரமணி யன் முன்னெடுப்பில் 168 வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் தலைமை யில் பகுதி செயலாளர் இரா. துரைராஜ் முன்னிலையில் 168 வது வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வீடுகள் தோறும் உள்ள அனைத்து மகளிர்கள் பங்கு பெறும் மாபெரும் கோலப்போட்டி இன்று (21.01.2025 செவ்வாய்கிழமை) காலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரை நடைபெறுகிறது 07.00 மணிக்கு மேல் அதற்கான மதிப்பீட்டு குழு வீடு வீடாக சென்று கோலங்களை மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்கப் படு கிறது முதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெறும் மகளிருக்கு ரூபாய் 10ஆயிரம் மதிப்புள்ள சலவை இயந்திரமும் இரண்டாம் பரிசாக ரூபாய் 7,000 மதிப்புள்ள டில்டிங் வெட் கிரைண்டரும் மூன்றாவது பரிசாக ரூபாய் 5,000 மதிப்புள்ள சுமீத் மிக்சியும் மற் றும் கலந்து கொண்டு கோல மிட்ட அனைத்து மகளிர் களுக் கும் சிறப்பு பரிசுகள் வழங்கும் விழா 21.01.2025 செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு கிண்டி, ஈக்காட்டுத் தாங்கல் பூந் தமல்லி சாலை கங்கை அம்மன் கோயில் அருகில் அருகில் நடை பெறுகிறது

விழாவில் மாவட்ட செயலா ளர் அமைச்சர் , மா.சுப்பிர மணி யன் கலந்து கொண்டு அனைவ ருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறார். நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பொதுக்குழு உறுப் பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி., ஆர்.டி.மூர்த்தி, பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கி யம், ஆர்.அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி, வட்ட கழக செயலாளர் கள் எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில்

மாவட்ட பிரதிநிதிகள் டி.வி. நரசிம்மன், ச.சேகர், என்.நந்த கோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், ஜி.செல்வராஜ், க.உமாபதி, வே.முருகன், ஏ.மஜீத், இரா.சுதாபிரியன், கோட்டூர் ந. பாபு, கே.எம்.எஸ்.கணேசன், மு. மகே ஷ்லாரன்ஸ்,ஜி.யோவான் வே.ரமேஷ்குமார், சைதை ஆ.வர தன், வட்ட நிர்வாகிகள் ஈ.தன சேகரன், எம்.ராஜி எஸ்.தேவி எஸ்.அறிவாணந்தம் கு.வீராச்சாமி கு.மோகன் கே.ராஜாராம் மா. ராஜ்குமார் ஆர்.குப்பன் அணிக ளின் நிர்வாகிகள் கே.எஸ்.பாபு ஆர்.செல்வம் எஸ்.எம்.மோகன் தாஸ் ஜே.வி.பிரதாப் என்.சுதாகர் டி.குருமூர்த்தி மு.பாபு ஆர்.விமல நாதன் சபரி ஆர்.குமார் மு.செந் தில்வேல் வ.கதிர்வேல் பா.பரத்கு மார் உள்ளிட்ட சைதை கிழக்கு பகுதியில் உள்ள மாவட்ட அள விலான அணிகளின் நிர்வாகிகள் பகுதி அளவிலான அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகி கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்

வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பகுதிகளில் உள்ள வீடுகளில் வீடுகள் தோறும் போடப்பட்ட வண்ண கோலங் களை காலை 7.00 மணிக்கு மேல் மதிப்பீடு செய்து முதல் பரிசு இரண்டாம் பரிசு மூன்றாவது பரி சுக்குரிய கோலங்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும் சிறப்பு பரிசுக்குரிய அனைத்து கோலங்க ளையும் பட்டியல் இட வேண் டிய திருப்பதால் நமது 168வது வட்டத்தில் உள்ள பகுதி நிர்வாகி கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிக ளின் மாவட்ட, மற்றும் பகுதி ,நிர் வாகிகள், வட்ட கழக முன்னோ டிகள், பாக முகவர்கள், ,பாக பணியாளர்கள், சார்பு மன்ற நிர் வாகிகள், செயல் வீரர்கள் ,வீராங் கனைகள் ,அனைவரும் காலை முதல் மாலை வரை நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என வட்ட செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் பகுதியில் புதிதாக தனியார் உடற்பயிற்சி நிலையத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர். குமரன் திறந்து வைத்து நடைபெற்ற ஆணழகன் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு சான்றிதழ் பரிசு வழங்கினார். உடன் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி முன்னாள் வட்ட செயலாளரும் மாவட்ட பிரதிநிதியும் கழக மூத்த முன்னோடியுமான பா.வேதாசலம் படத்திறப்பு நிகழ்ச்சி எம்.நடராஜன் ஏற்பாட்டில் வட்ட செயலாளர் ஆர்.ஏ.எம்.சசிகுமார் தலைமையில் பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கி.ராஜேந்திரன், வி.மணிமாறன், ஆர்.பழனி, டி.ஜெஸ்டின், இ.பாலசுந்தரம், ஆகியோர் வரவேற்றனர். இதில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்,மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் அன்னாரின் படத்தை திறந்து வைத்தனர்.என்.மருதுகணேஷ், சிவாஜிகிருஷ்ணமூர்த்தி,கே.பாலு, மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், பி.சீனிவாசன்,நேதாஜி யு.கணேசன் எம்.சி, கி.தேவன், ஜி.ஏழுமலை, டாக்டர் கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், எஸ்.சொக்கலிங்கம், எஸ்.ஜான்கென்னடி, இ.ரவிக்குமார், ஏ.கே.பால்சாமி, எஸ்.சூரியபிரபா, ஆர்.சூரியகாந்தா, வி.கார்த்திக், கே.அன்புமணி, பூபதி, பெ.ரமேஷ், ஏ.தனசேகர், இந்திராணி, ஜி.வி.கோபால், ஜி.செல்வராஜ், வி.செல்வராஜ், அபிசேக், கிரி, சி.ராமன், விஜியரங்கன், வி.தங்கமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று - உத்திரமேரூர் தொகுதி

சாலவாக்கம் - எடமச்சி கிராமங்களில் பேருந்து நிழற்குடை

க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

காஞ்சிபுரம், ஜன. 21 - காஞ்சிபுரம் மாவட்டம், உத் திரமேரூர் ஒன்றியம், சாலவாக் கம் ஊராட்சி மற்றும் எடமச்சி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் பேருந்து நிறுத்தத்தில் புதிதாக நிழற்குடை கட்டி தர வேண்டும் என உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளருமான க.சுந் தரிடம் அப்பகுதி மக்கள் சார்பில் மனு அளித்தனர். அந்த மனு வினை பரிசீலனை செய்து உத்தி ரமேரூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இரண்டு ஊராட்சிகளிலும் பேருந்து நிழற் குடை கட்டி முடிக்கப்ப ட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று (20.1.1025) காலை நடை பெற்றது.

அதில் சாலவாக்கம் ஊராட்சி, எடமச்சி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளின் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

இதில் ஒன்றிய செயலாளர் டி. குமார் முன்னிலை வகித்த னர். ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், எடமச்சி ஊராட்சி மன்ற தலைவர் தர்ம ராஜ், ஆகியோர் வரவேற்றனர்.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ புதிதாக கட்டி முடிக் கப்பட்ட பேருந்து நிழற்குடை யை பொதுமக்களின் பயன்பாட் டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.ஆர். வெங்கடேசன், கோ.சிவராமன், ரவி, ஆ.சேகர், பி.சுப்பிரமணி, நந்தா, பி.வி.ஏ. அழகப்பன், ஆனந்தன், திருமதி.நந்தினி முர ளிதரன், சங்கீதா பழனி, திருமதி. சசிகலா வெங்கடேசன், பொற் பந்தல் பாஸ்கரன், சு. முரளிதரன், அரசு ஒப்பந்தாரர் பழவேறி முரு கன், செ.விஷ்ணு, ஜெயபுரி, நாக ராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் சக்தி கணபதி நகரை சேர்ந்த ஜெயகிருஷ்ணன் (44) மணலி போக்குவரத்து காவல்துறையில் தலைமைக் காவலராக பணியாற்றி வந்தார் நேற்று முன்தினம் மாலை மணலி மார்க்கெட் பகுதியில் பணியில் இருந்த போது திடீரென மயங்கி விழுந்தார். சக போலீசார் அவரை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஜெயகிருஷ்ணன் இறந்து விட்டதாக கூறினர். இதனைத் தொடர்ந்து திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத் தலைவவருமான கே.பி.சங்கர் அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி ஜெயகிருஷ்ணனின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார்.

அருப்புக்கோட்டை

வழக்கறிஞர் க.முனீஸ்வரன் மறைவு!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ இரங்கல்!

சென்னை, ஜன.21 விருதுநகர் தெற்கு மாவட் டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வ ரன் மறைவுற்ற செய்தி அறிந்து கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது இரங் கல் செய்தி வருமாறு: -

விருதுநகர் தெற்கு மாவட் டம் அருப்புக்கோட்டையை சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வ ரன் நேற்று (20.01.25) காலை அவரது இல்லத்தில் மரணம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தி னருக்கும், நண்பர்களுக்கும் கழக சட்டத்து றையின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள் கிறேன்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தெரி வித் துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மு.ப. அழகியநம்பி

சனவரி 21 (2022)

கழகம் துவக்க காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டக் கல்லூரியில் மாணவராக பயிலும் போதே 'மாணவர் தி.மு.க.'வில் உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

1971ஆம் ஆண்டு, தூத்துக்குடி உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவராகவும் - மாநில தமிழ்ச் சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.